## தமிழ் இணைய மாநாடு 2010: நான்காம் நாள், 27 ஜூன் 2010, செய்திக் குறிப்பு

## இனி தமிழ் யூனிகோட்தான் தமிழக அரசின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரபூர்வ தமிழ் எழுத்துக் குறியீடாக இருக்கும். - மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழக அரசு ஆணையில் கையெழுத்திட்டார் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

தமிழ் இணைய மாநாட்டின் நன்றி நவிலல் நிகழ்வின்போது பேசிய தகவல் தொடர்புத்துறை முதன்மைச் செயலர் பி.டபிள்யூ.சி. டேவிதார், தமிழக முதல்வர் கையொப்பம் இட்ட ஆணையை, மாண்புமிகு தகவல் தொடர்பு அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் முன்னிலையில் வெளியிட்டார். இந்த ஆணையின்படி,

1. இனி தமிழக அரசு, TAM, TAB மற்றும் பிற பிரத்யேக 8-பிட் குறியீடுகளிலிருந்து 16-பிட் தமிழ் யூனிகோடுக்கு (ஒருங்குறி) மாற வேண்டும்.

2. 16 பிட் தமிழ் யூனிகோட் மட்டுமே ஒரே அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக் குறியீடாக இருக்கும்.

3. எந்த மென்பொருள்களில் எல்லாம் தமிழ் யூனிகோட் வேலை செய்யவில்லையோ அல்லது முழுதாகத் தெரியவில்லையோ, அந்தப் பயன்பாடுகளில் TACE-16 குறியீட்டை மட்டும் ஒரு மாற்றுக் குறியீடாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

முரசொலி மாறன் அரங்கில் நடைபெற்ற நன்றி நவிலல் விழாவில், தமிழ் இணைய மாநாட்டின் தலைவர் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப அமைச்சர், தமிழக அரசு, டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மைச் செயலர் பி.டபிள்யூ.சி. டேவிதார், எல்காட் மேலாண்மை இயக்குனர் சந்தோஷ் பாபு, உத்தமம் அமைப்பின் தலைவர் தி.ந.ச. வேங்கடரங்கன், துணைத் தலைவர் கவியரசன், செயல் இயக்குனர் மணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவுக்கு வந்திருந்த அனைத்துப் பார்வையாளர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதி நாளான 27 ஜூன் 2010 அன்று, காலை மட்டும்தான் அமர்வுகள் இருந்தன. மதியம் 12.00 மணியோடு ஆய்வரங்க நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

காலையில் முகப்பரங்கத்தில் சி-டாக் நிறுவனத்தின் திருமதி அனுராதா லீலே. இந்திய மொழிகள் தொடர்பான கணினிப் பணிகளில், தமிழ் மொழியின் பிரத்யேக வடிவம் காரணமாக மொழிகளுக்கு இடையேயான மொழிமாற்றம் ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்களைத் தெளிவாக விவரித்தார். இந்தச் சிக்கல்களை எதிர்கொள்வதில்தான் ஆராய்ச்சியாளர்கள் தங்களது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

அடுத்து சிறப்புப் பேச்சை வழங்கியவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் கணினி மொழியியல் மையத் தலைவருமான பேராசிரியர் தெய்வசுந்தரம், கணினித்தமிழ் வளர்ச்சிக்கான ஆராய்ச்சிப் பணிகள் குறித்து விளக்கமாகப் பேசினார். அடுத்த சில ஆண்டுகளில் கணினித்தமிழ் ஆராய்ச்சி எந்தெந்த திசைகளில் செல்லவேண்டும் என்பதற்கான பாதையை இந்த சிறப்புப் பேச்சு காண்பித்தது.

கணினி வழி தமிழ் கற்றல், இணைய வழிக் கல்வி, கணினி மொழியியல், கணினியில் தமிழ்ப் பேச்சு மற்றும் சொற்பகுப்பு ஆய்வு ஆகிய அமர்வுகள் நான்கு அரங்கங்களிலும் நடைபெற்றன. குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரிப் பேராசிரியர் முத்துக்குமார் ஆறுமுகம், அவர்களது கல்லூரியில் கணினியியல் துறையில் தமிழ் தொடர்பாக என்னென்ன ஆய்வுத் திட்டங்கள் நடைபெறுகின்றன என்பதை விவரித்தார். ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் தெலுங்கு-தமிழ் இருவழி மொழிபெயர்ப்புக்கான மென்பொருளைத் தயாரிப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றி விளக்கிப் பேசினர்.

சிங்கப்பூர் பள்ளி ஒன்றில் ஆசிரியராக இருக்கும் முருகன், அவர்களது பள்ளியில் கூகிள் தேடுபொறியைப் பயன்படுத்தி எவ்வாறு மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கிறார்கள் என்பதை விளக்கினார். ரவிஷங்கர் சோமசுந்தரம், மூடுல் என்ற திறமூல மென்பொருளைக் கொண்டு எப்படி கல்வி கற்பிப்பது என்பது பற்றிப் பேசினார்.

**27.06.2010 காலை நிகழ்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| **27.06.2010** | **சிறப்பு பேச்சு** | | |
| **அரங்கம்** | முரசொலி மாறன் அரங்கு | | |
| காலை 9.00 முதல் 10.00 மணி வரை | சிறப்பு பேச்சு<br>கணினித்தமிழ் வளர்ச்சிக்கான அடிப்படை ஆராய்ச்சிப் பணிகள் | : | திரு. ஹேமந்த் தர்பாரி, திருமதி. அனுராதா லீலே, சி-டாக்<br>முனைவர் ந. தெய்வ சுந்தரம், பேராசிரியர் & தலைவர், தமிழ்மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம் |
| காலை 10.00 முதல் 10.30 மணி வரை | தேநீர் இடைவேளை | | |
| அமர்வு ஒன்று | **முரசொலி மாறன் அரங்கு**<br>**தமிழ் மென்பொருள் மற்றும் இணையப் பக்கங்கள் உருவாக்கியோரோடு ஓர் உரையாடல்** | | |
| காலை 10:30 முதல் 11:30 மணி வரை | திரு.செந்தில் ராஜ், தமிழ் | | |
| 12.00 முதல் 12.30 வரை | சிறப்பு நிகழ்ச்சி:<br>○ தமிழ் இணைய மாநாட்டுக்குழுத் தலைவர் முனைவர் மு.ஆனந்தகிருஷ்ணன் அவர்கள்<br>○ மாண்புமிகு தகவல் தொடர்புத்துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள்<br>○ தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மைச் செயலர் திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார் இ.ஆ.ப அவர்கள்<br>○ எல்கார் மேலாண்மை இயக்குனர் திரு. சந்தோஷ் பாபு இ.ஆ.ப அவர்கள்<br>○ உத்தமம் தலைவர் திரு. தி.ந.ச.வேங்கடரங்கன் அவர்கள்<br>○ உத்தமம் துணைத்தலைவர் வா.மு.சே.கவியரசன் அவர்கள்<br>○ உத்தமம் செயல் இயக்குனர் எஸ்.மணியம் அவர்கள் | | |
| **27.6.2010**<br>**அமர்வு இரண்டு** | **கணினி வழி தமிழ் கற்றல்** | | |
| **அரங்கம்** | சுஜாதா அரங்கு | | |
| | தலைமை | : | திரு சிவா பிள்ளை, லண்டன் |
| காலை 10.30 முதல் 11.00 மணி வரை | பல்லூடகப் பயன்பாட்டில் தமிழ்ப் பாடத்திட்டம் | : | முனைவர் எ. மணவழகன்<br>SRM University, Chennai |
| காலை 11.00 முதல் 11.30 மணி வரை | கணிணி வழியில் தமிழ்ச் சொற்றொடர்களைக்கற்றல் | | முனைவர் ஜி. சிங்காரவேலு,<br>பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| காலை 11.30 முதல் 12.00 மணி வரை | கூகுல்-வழியாகத் தமிழ் கற்பித்தல் | : | திரு முருகன், Bendemeer Sec. School, திரு. ஞானசேகரன், St. Theresa's Convent, திரு மோகன், Cresent Girls Sec School, |
| **27.6.2010**<br>**அமர்வு மூன்று** | **இணையவழிக் கல்வி** | | |
| **அரங்கம்** | நா. கோவிந்தசாமி அரங்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை | : | திரு தங்கராஜா தவரூபன்-பிரதம நிறைவேற்று அதிகாரி<br>Speed IT Net, Srilanka |
| காலை 10.30 முதல்<br>11.00 மணி வரை | மூடுல் - மேம்பட்ட முறையில் கற்க, கற்பிக்க (தமிழ் மொழி) | : | திரு இரவிஷங்கர் சோமசுந்தரம் |
| காலை 11.00 முதல்<br>11.30 மணி வரை | தமிழ் இணையப் பல்கலைக்கழகம்-தரப்பகுப்பாய்வு | | திரு எஸ் ராஜகுமார்<br>Kumaraguru College of Technology |
| காலை 11.30 முதல்<br>12.00 மணி வரை | தொடக்கப் பள்ளிக்கு தேவையான தமிழ்க் கணினி தேவைகள் | : | திரு ஆன்டோ பீட்டர்,<br>Softview |
| **27.6.2010**<br>**அமர்வு நான்கு** | **கணினி மொழியியல்** | | |
| **அரங்கம்** | **உமர் தம்பி அரங்கு** | | |
| | தலைமை | : | திரு வா.மு.சே.கவியரசன் |
| காலை 10.30 முதல்<br>11.00 மணி வரை | தெலுங்கு – தமிழ் இருவழி மொழிபெயர்ப்புக் மென்பொருளுக்கான அகராதி தயாரித்தலில் உள்ளச் சில சிக்கல்கள் | : | பரமேஷ்வரி கே,<br>லாவன்யா ஜே,<br>க்ருபானந்தன் என்,<br>உமா மகேஷ்வர ராவ் ஜி.<br>University of Hyderabad |
| காலை 11.00 முதல்<br>11.30 மணி வரை | தானியங்கு சந்திப்பிழைத் திருத்தி உருவாக்கத்தில் முடிவு நிலை தானியங்கியின் பங்கு | | அனிதா எஸ். பிள்ளை<br>Hindustan University |
| காலை 11.30 முதல்<br>12.00 மணி வரை | இன்றைய மாணவர்களுக்கான தமிழ் கணிமை திட்டங்கள் – எங்கள் கல்லூரி | : | திரு முத்துக்குமார் ஆறுமுகம்<br>Kumaraguru College of Technology |
| **27.6.2010**<br>**அமர்வு ஐந்து** | **கணினியில் தமிழ்ப் பேச்சு மற்றும் சொற்பகுப்பு ஆய்வு** | | |
| **அரங்கம்** | **யாழன் சண்முகலிங்கம் அரங்கு** | | |
| | தலைமை | : | மைக்கேல் கப்லான் |
| காலை 10.30 முதல்<br>11.00 மணி வரை | உரை – பேச்சொலி மாற்றி - தமிழ் அசைகளை உணரும் மென்பொருள் | : | திரு டி. ஜெயஷங்கர்,<br>அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி<br>முனைவர் அற்புத விஜய செல்வி,<br>Kings College of Eng. Pudukkottai,<br>பேரா. ஆர். இராஜேந்திரன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| காலை 11.00 முதல்<br>11.30 மணி வரை | தமிழ் உரைகளை உதட்டசைவு மூலம் ஒலிக்கு மாற்றும் மென்பொருள் | | திரு தமிழரசன்<br>CEG- அண்ணா பல்கலைக்கழகம் |
| காலை 11.30 முதல் | மின் வழி தமிழ்க் கற்றலின் | : | முனைவர் ஏ. கோவலன், |

| | | | |
|---|---|---|---|
| 12.00 மணி வரை | திறனாய்வு வழிவகைகள் | | Periyar Maniammai University |